(b) if so, the reasons therefor; and

(c) whether the Government have proposed to open a few more Evening Colleges for Men in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No. The response is satisfactory.

(b) Does not arise.

(c) No.

திரு. வை. சங்கரன் : மதுரையில் இதுபோன்ற கல்லூரி ஆரம்பிக்கும்போது, இருக்கும் இடங்கள் தூரமாக இருப்பதால், கல்லூரி நேரம் சௌகரியமாக இல்லை. ஆகவே, இதற்கு போதுமான ஆதரவு இல்லை என்ற தகவல் வந்திருக்கிறதா ? அப்படியானால், போதுமான அவகாசம் கொடுத்து, அவரவர் ஆபீஸ் வேலை நேரம் முடிந்து சுமார் ஒரு மணி நேரம் அவகாசம் கொடுத்து அதற்கேற்ற வகையில் மாலைக் கல்லூரிகள் அமைக்க உத்தேசிக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த ஆண்டு, மதுரை தகுதியுள்ளதா என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டிய நிமித்தம் ஏற்படவில்லை. மூன்று கல்லூரிகள் முதலில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றில் மாலை வகுப்புகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மதுரையை எடுத்துக் கொள்வது என்பது பின்னால் அடுத்த ஆண்டில் யோசிக்கப்படவேண்டிய விஷயம்.

திரு. ம. கமலநாதன் : இந்த மாலை நேரக் கல்லூரிகளில் சேர்ந்திருக்கும் அலுவலர்களைப் பொறுத்து, அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் படிப்பு முடியும் வரையில் அவர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட மாட்டார்கள் என்ற உறுதி அளிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்கள் படிப்புப்பற்றிதான் உறுதி. உத்தியோகத்தைப் பற்றி உறுதி இல்லை.

*** 239 கேள்வி.—திரு. கோ. சி. மணி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:—

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் அரசினர் கல்லூரியில் பட்டப் படிப்புக்கான மாலை நேர வகுப்புகள் துவக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

தமிழ்ப் பயிற்சி மொழிக் கல்லூரிகள்

*** 240 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) 1965-66-ம் ஆண்டு வரையில் தமிழ் நாட்டில் எந்தெந்தக் கல்லூரிகளில் தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டம் நடைமுறையில் உள்ளது ?

3rd November 1965]

(இ) எந்தெந்த பாடங்கள் தமிழில் நடைபெறுகின்றன ?

(ஈ) ஒவ்வொன்றிலும் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Tamil medium of instruction has been introduced in the following 5 colleges in the subjects noted against them :—

(1) Government Arts College, Coimbatore—History, Economics, Politics, Geography and Psychology.

(2) P.S.G. Arts College, Coimbatore—Economics and Social Science.

(3) N.G.M. College, Pollachi—History.

(4) Sri Avinashilingam Home Science College for Women, Coimbatore—Economics.

(5) Government Arts College, Kumbakonam—Economics.

(*c*) It is too early to collect the particulars.

புலவர் கா. கோவிந்தன் : தமிழ்ப் பயிற்சித் திட்டம் கோவை மாவட்டத்திலும், கும்பகோணத்திலும் மட்டும்தான் இருக்கிறது. சென்னையில் அந்த ஒரு நிலைமை ஏன் கொண்டு வரப்படவில்லை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சென்னையிலும் அந்தத் திட்டத்திற்கு இடம் இருக்கிறது. கவர்ன்மெண்ட் ஆர்ட்ஸ் காலேஜ், க்வீன் மேரிஸ் காலேஜ் இரண்டிலும் இருக்கிறது.

Tax on Motor Vehicles

*241 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that a surprise check of permits, licences, etc., of motor vehicles was made by the Transport Commissioner on 18th January 1965 near Erode;

(*b*) the number of vehicles found to be plying without licences, permits, etc. ; and

(*c*) the action taken against the owners?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) A statement [a] is placed on the table of the House.

(c) Action is being taken against the owners and drivers by the authorities concerned, and reports are awaited.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்தக் குறிப்பிலே ‘வரியைக் குறைவாகச் செலுத்தல், என்றிருக்கிறது. வரியை எப்படிக் குறைவாகச் செலுத்த முடியும் ? வரி வாங்கும்போது இந்த மோட்டாருக்கு இவ்வளவு வரி வாங்கவேண்டுமென்று இருக்கிறது. வரி குறைவாகச் செலுத்தினால் இவ்வளவு கொடுக்கவேண்டுமென்று சொல்லி அதை வாங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

---

a Printed as Appendix II on page 125 infra.